Registered as a Newspaper

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ ஆனி மீ 32 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 19 (16 – 07 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 198

## இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல

### தீவிரவாதமே என்கிறார் பிரதமர்

லண்டன், ஜுலை 15

இலங்கையில் நிலவும் தீவிரவாதத்தை இனப் பிரச்சினை என்றும் மனித உரிமைப் பிரச்சினை என்றும் கூறி உலகை நம்ப வைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் பிரேமதாஸ பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தாட்சரிடம் மேற்சண்டவாறு தெரிவித்தார்.

திருமதி தாட்சரை திரு. பிரேமதாஸ நேற்றுச் சந்தித்தார். பேச்சுக்கள் நடத்தினர்.

அப்போது திரு. பிரேமதாஸ பிரிட்டிஷ் பிரதமரிடம் சொன்னதாவது:

இலங்கையில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு தமிழக அரசு பகிரங்கமாகவே உதவுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குபெரும்தொகைப் பணத்தையும் தமிழக அரசு கொடுத்து உதவியுள்ளது.

பிரசசினைக்குத் தீர்வு காண எமது அரசு பேச்சுக்களை நடத்தத் தயாராக உள்ளது

இந்தியா விமான மூலம் உணவுப் பொதிகளை

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

16-07-1987

வியாழக்கிழமை

சுபநேரம்:-
7.30 முதல் 9.00 வரை
ராகுகாலம்:-
1.30 முதல் 3.00 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

தக்ஷிணாயன புண்ணிய காலம்

★ வடக்கு - கிழக்கு இணைந்த

# சுயாட்சி அமைப்பின் அவசியம் வலியுறுத்து

## இந்தியா எதிர்பார்ப்பது

### அதுவே என்று டிக்ஸிற் ஜே. ஆரிடம் எடுத்துரைப்பு

கொழும்பு, ஜுலை 16

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சிப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதனையே இந்தியா, ஸ்ரீ லங்காவிடம் இருந்து எதிர்பார்க்கிறது.

இவ்வாறு இந்தியத் தூதுவர் திரு ஜோகேந்திர நாத் டிக்ஸிற், கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசியபோது மிகவும் வலியுறுத்திக் கூறினார் என மிக நம்பிக்கையாக அறியப்படுகிறது.

வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சிக்குக் குறைந்த எதையும் தமிழர் அமைப்புக்களைக் கொண்டு ஏற்றுக்கொள்ளச் செய்வது மிகவும் கடினம் என்பதையும் திரு. டிக்ஸிற் ஜனாதிபதியிடம் அழுத்தம் திருத்தமாகக் கூறியதாகவும் அறியப்படுகிறது

ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவை, இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் கடந்த செவ்வாய்ககிழமை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இலங்கை அரசிடம் இருந்து இந்தியா எதனை எதிர்பார்க்கிறது என்பதனை எடுத்துச் சொல்வதாக இச்சந்திப்பு அமைந்தது.

தமிழர் அமைப்புகளின் நிலை என்ன —

அரசியல் தீர்வு மூலமே இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசு உண்மையாகவே விரும்பினால் அது என்ன செய்யடும்—

ஆகக் கூடிய தீர்வாக ஸ்ரீலங்கா டிச. 19 ற்கும் அதிகமாகச் செல்ல வேண்டியதன் அவசியம்–

வடக்கும் கிழக்கும் இணைந்த தனி ஆட்சிச் சுயாட்சிப் பிரிவு ஒன்றை வழங்க முன்வர வே டியதன் அவசியம்—

என்பன குறித்து திரு. டிக்ஸிற் ஜே. ஆரிடம் எடுத்துரைத்தார் என அறியப்படுகிறது.

டிச. 19 க்கும் அதிகமாகத் தன்னுல்எதையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அட அந்தக் காலத்துப் பழமொழியையே இவை பொய்யாக்கி விட்டினம் போலை... அப்பிடியெண்டா தலையணை மந்திரம் பற்றியும் ஏதாவது கண்டு பிடிப்பினமோ சீனக்காரர்...?

## வடமராட்சியில் சேவையில் ஈடுபட நான்கு பஸ்கள்!

### மேலும் ஆறு விரைவில் வரும்

யாழ்ப்பாணம், ஜுலை 16

வடமராட்சிப் பகுதியில் சேவையில் ஈடுபடுத்துவதற்கென ஸ்ரீ லங்கா அரசு நான்கு பஸ்களை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்துள்ளது.

மேலும் ஆறு பஸ்கள் இவ்வாரம் அளவில் யாழ்ப்பாணம் வந்துசேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடமராட்சிப் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றியதையடுத்து அங்கு போக்குவரத்துச் சேவைகளை வழமைக்குக் கொண்டுவருவதற்காகவே இந்த பஸ்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. (உ-10)

### அரச அதிபர் பார்வையிடுவார்

யாழ்ப்பாணம், ஜுலை 16

வடமராட்சியில் உள்ள மக்களின் நிலை பற்றி அறிவதற்கு யாழ் அரச அதிபரும் இந்திய, ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச சங்க பிரதிநிதிகளும் இன்று வடமராட்சிசெல்கின்றனர். (இ-10)

## தலையணை மாற்றினால் தலையிடி தீரும்!

ஹொங்கொங், ஜுலை 15

தலையணையை மாற்றினால் தலையிடி தீருமா?

தீரும் என்று சீன வைத்தியர்கள் பதில் தந்திருக்கின்றனர்.

மூலிகைகள் அடைக்கப்பட்ட தலையணையின் மீது தலையை வைத்து தூங்கினால்—

தலையிடி, உயர் இரத்த அழுத்தம், தூக்கமின்மை ஆகிய நோய்கள் தீருகின்றன என்பது சீன வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்தலையணைகளுக்குள் மூலிகைச் செடிகள், காட்டு கிறிஸாந்திமம் செடிகள் ஆகியன அடைக்கப்படுகின்றன.

—இப்படித் தயாரிக்கப்பட்ட தலையணை மீது தலையை வைத்து நித்திரை செய்த 7o3 நோயளார்களில் 82சதவீதமானோர் தலையிடி,

(4ஆம் பக்கம் பார்க்க)

## மந்திகையில் நோயாளர்களுக்கு காலை உணவு இல்லை!

யாழ்ப்பாணம், ஜுலை 16

மந்திகை ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளர்களுக்கு காலை உணவு வழங்கப்படுவதில்லை.

தேநீர் மட்டுமே வழங்கப்படுவதாகவும். நண்பகல், இரவு வேளைகளில் பாண் வழங்கப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது..

இதேவேளை இந்த ஆஸ்பத்திரியில் ஒரே ஒரு டாக்டரும் இரண்டு ஊழியர்களுமே கடமை புரிகின்றனர்.

இருபதுக்கும் அதிகமான நோயாளர்கள் இராணுவத் தாக்குதல்களினால் காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளனர். (உ-10)

நூற்றுக்கணக்கான

## தமிழ் இளைஞர்கள் முல்லைத்தீவில் கைது!

யாழ்ப்பாணம், ஜுலை 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் திடீர் ஊரடங்குச் சட்டத்தை பிரகடனப்படுத்திய படையினர், அங்கு பெரிய அளவில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சில இடங்களில் போராளிகளும், படையினரும் மோதிக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகளினபோது பலர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

## வரணி, சுட்டிபுரத்தில்

### 15க்கும் அதிகமானோர் காயம்

யாழ்ப்பாணம், ஜுலை16

வரணி, சுட்டிபுரம் பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தினர் நடத்திய ஷெல் தாக்குதல்களினாலும ஹெலிக்கொப்டர் சூட்டினாலும் பதினைந்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

சுட்டிபுரம் அம்மன் கோவிலும் ஹெலி மற்றும் ஷெல்தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைந்துள்ளது.

குடத்தனை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட இருபதிற்கும் அதிகமான ஷெல்குண்டுகள் வரணி, சுட்டிபுரம் பகுதிகளில் விழுந்து வெடித்துள்ளன.

காயமடைந்த பலர் யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-10)

### சீருடையின்றி சிப்பாய்கள்

பலாலி. ஜுலை 16

மாவிட்டபுரம். வீமன்காமம் பகுதிகளில் சீருடையற்ற சிப்பாய்கள் ஆயுதபாணிகளாகக் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

சில பொதுமக்களுடன் போராளிகள் போன்று நடித்து உளவறியும் வேலையும் இவர்கள் செய்வதாகக் கூறப்படுகின்றது. (உ-1 19

## யாழ் மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜுலை16

எதிர்வரும்26 ஆம்திகதி நடைபெறவிருந்த ஆறும் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் பின்போடப்பட்டுள்ளது,

ஏனைய மாவட்டங்களில் இப்பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் ஊரடங்கு

யாழ்ப்பாணம், ஜுலை 16

யாழ் குடாநாடு முழுவதும் நேற்று இரவு 7 மணி தொடக்கம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று வியாழன் காலை 5 மணியுடன் நீக்கப்படும் என்று யாழ்ப்பாணம் வானொலி நேற்று அறிவித்தது.

யாழ். மாவட்ட இணைப்பதிகாரியின் உத்தரவு இது என்றும் அவ்வானொலிச் செய்தி தெரிவித்தது. (உ-எ)

### மேற்பார்வையாளர் மாநாடு

யாழ்ப்பாணம், ஜுலை 16

எதிர்வரும் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர், நிரந்தர நோக்குநர், மேலதிக மேற்பார்வையாளர், இணைப்பதிகாரிளாக நியமிக்கப்பட்டவர்களுக்கான அறிவுறுத்தல் மாநாடு எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

— இப்படி யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (உ-எ)

## வடமராட்சிப் பகுதி தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நிலைபற்றிமுடிவுஇல்லை

கொழும்பு, ஜுலை 16

வடமராட்சியில் இருந்து விண்ணப்பித்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எங்கு சென்றுபரீட்சை எடுப்பது, என்பது பற்றி கல்வி அமைச்சு வட்டாரங்கள்தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்றுதெரிகின்றது.

வடமராட்சியை சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கொழும்பு சென்று பரீட்சை எடுப்பதை கொழும்பில்உள்ள அதிகாரிகள் விரும்பவில்லை என்று தெரிகின்றது.

வடமராட்சியில் இருந்து சுமார் ஐநூறு பேர் தனிப்பட்ட முறையில் பரீட்சை எடுக்க விண்ணப்பித்துள்ளனர்.

### சம்பூரில் இராணுவமுகாம்

மூதூர் – சம்பூர் மகா வித்தியாலயத்தில் புதிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சென்ற மாதம் அப்பகுதியில் இடம் பெற்ற பயங்கரவாத தடுப்பு நடவடிக்கையை அடுத்தே இந்த முகாம் அமைக்கப் பட்டுள்ளது. முகாம் அமைக்கப்பட்டுள்ளதால் இந்தப் பாடசாலை மூடப்பட்டுள்ளது.

## சிக்கிய அகதிகளை ஏற்றிச் சென்ற கப்பலில் கப்டனுக்கு சிறை!

ஒட்டாவா, ஜுலை 16

கடந்த வாரம் 174 அகதிகளைஏற்றிச்சென்று கனடாக்கரையில் இறக்கி விட்ட கப்பலின் உரிமையாளருக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனையை கனடா நீதிமன்றம்ஒன்று நேற்று விதித்தது.

உரிமையாளர் சுவீடன் நாட்டுப்பிரசை ஆவர். கப்பலின் கப்டனும் அவரே.

இவருக்கு உதவியாக இருந்த இன்னொரு நபருக்கு மூன்று மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கனடாவின் குடிவரவுச் சட்ட விதிகளை மீறிய குற்றத்தை இரண்டு பேரும் ஒப்புக்கொண்டனர். (உ-எ)

### முடிவு இன்று தெரியும்

புதுடில்லி, ஜுலை 16

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் இன்று வியாழன் காலை எண்ணப்படுவது ஆரம்பமாகின்றது.

இதனிடையில் கட்சி மாறியதற்காக பஞ்சாப் சுட்டசபையில் இருந்து வெளியேற்றப்பட்ட 22 அகாலிதள் எம்.எல் ஏக்கள் அளித்த வாக்குகளையும் சேர்த்து எண்ணும் படியும், அதன் பின்னர் அவ்வாக்குகளைத் தனியாக எடுத்து வைக்கும் படியும் புதுடில்லி உயர் நீதிமன்றம் உத்தரவு இட்டு உள்ளது.

தேர்தல் முடிவு இன்று மாலை வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (உ-எ)

### மனநோயாளி சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஜுலை 16

கடந்த திங்கட்கிழமையன்று மந்திகை ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறி வீதிக்குச் சென்ற மனநோயாளி ஒருவரை படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர். (உ-10)

### சாமர்த்தியக் கொள்ளையர்

லண்டன், ஜுலை 15

உலகின் மிகப் பாதுகாப்பான இடம் எனக் கருதப்பட்ட லண்டன் பெட்டகப் பாதுகாப்பு களஞ்சியம் ஒன்றில் இருந்து 2 கோடி பவுணுக்கும் அதிகமான பணம், நகைகள் மற்றும் பெறுமதிமிக்க தஸ்தாவேஜுக்கள் இனம் தெரியாதோரால் கொள்ளையிடப்பட்டன.

சாதாரண வாடிக்கையாளர்கள் போல் வந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

குகன் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம் 180, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவந்த குகன் ஸ்ரோர்ஸ் வாடிக்கையாளர்களின் நலன்கருதி பாதுகாப்பான

புதிய இடத்திற்கு
கடந்த (10-07-1987) முதல்
மாற்றப்பட்டுள்ளது.

புதிய முகவரி:-

குகன்ஸ்ரோர்ஸ்

18, மின்சாரநிலைய வீதி,
(யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிலையம் செயற்பட்ட கட்டடம், பெரியாஸ்பத்திரிக்குப் பின்புறம்)
யாழ்ப்பாணம்.

[3220]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★★★★★★★★★ சின்னஞ்சிறு விளம்பரம் ★★★★★★★★★

**விண்ணப்பம்**

இந்தியாவில் அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதிபெற விரும்பும் மாணவ/மாணவிகள் 18ஆம் திகதிக்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை உண்டு. தகைமை:– G. C. E. (O/L): 1 7-87 அன்று உள்ளபடி 20 வயதிற்குக் குறைவாக இருக்கவேண்டும். ''ஹரிஹரன் என்ரபிரைஸ்'' 337, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (1282)

**சேவை**

முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கி வந்த யாழ் சைனீஸ் றெஸ்ரோரன்ற் தற்போது168 கோவில் வீதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது கைலாயபிள்ளையார் கோவில் சந்தியிலிருந்த கோவில் வீதி தெற்குப் பக்கமாக நூறு யார் தொலைவில் உள்ளது. (1286)


## வடமராட்சிக்கு சென்றவர் எங்கே?

கொக்குவில், ஜூலை 16

வடமராட்சியில் இடம்பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து அரியாலைப் பகுதியில் வசித்து வந்த ம. தருமகுலராசா (வயது 27) என்பவர் மீண்டும் கடந்த வாரம் அல்வாய்ப் பகுதிக்குச் சென்றார். ஆனால் அவர் இதுவரை திரும்பவில்லை.

இவரின் நிலை தெரியாது உறவினர்கள் கலக்கமடைந்துள்ளனர். (உ-69)

புலோலி, பருத்தித்துறை,நெல்லியடி,உடுப்பிட்டி

# கிராமிய வங்கிகள் மூலமான ஓய்வூதியம் சாவகச்சேரியில்

யாழ்ப்பாணம், ஜூலை16

வடமராட்சிப் பகுதியில் உள்ள நான்கு கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெற்றுவந்தவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை சாவகச்சேரி கிராமிய வங்கியில்வைத்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

–இவ்வாறு யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் புலோலி, பருத்தித்துறை, கட்டைவேலி – நெல்லியடி உடுப்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள நான்கு கிராமிய வங்கிகளிலும் ஓய்வூதியம் பெற்று வந்த சுமார் மூவாயிரம் பேர் சாவகச்சேரி கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறவுள்ளனர்.

இதன்படி ஏற்கனவே வடமராட்சிப் பகுதியில் உள்ள கிராமிய வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான காசோலைகள் திரும்பப் பெறப்படும்.

அதன் பின்னரே சாவகச்சேரி கிராமிய வங்கியின் மூலம் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இதேவேளை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களின் நிலைபற்றி, மேற்படி வங்கிகளின் பிரதேச முகாமையாளர்கள் இன்று யாழ் அரச அதிபருடன் கூடி ஆராய்வார்கள். (உ–எ)

### புத்தகங்கள் விநியோகம்

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலை மாணவர்களுக்குரிய புத்தகங்கள் வந்துசேர்ந்துள்ளன. வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் வைத்துஇப் புத்தகங்கள் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன. (இ–161)

## இறைநாமம் ஓதுவதால் இன்னல்கள் நீங்கும்

சாவகச்சேரி, ஜூலை 16

இறைநாமம் ஓதுவதால் நாம் இன்னல்களில் இருந்து எம்மை விடுவித்துக் கொள்ள முடியும். நாம ஜெபம் சிறந்த வழிபாடாகும். இதனை நாம் நாளாந்தம் நமது கடமைகளில் ஒன்றாகக் கொள்ள வேண்டும்.

இளைப்பாறிய அதிபரும் சைவப் பெரியாருமாகிய பண்டிதர் சி. வைரவப்பிள்ளை இவ்வாறு கூறினர்.

சாவகச்சேரி இந்து மகா சபையினரால் மட்டுவில் வடக்கு பனையடி வளவுப் பிள்ளையார் ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட திருவாசக முற்றோதல் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினர்.

பண்டிதர் எம். தம்பையா தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்ச்சி காலை முதல் மாலை வரை இடம்பெற்றது. (இ–31)

## ஓய்வின்றி நிவாரணம் வழங்கும் ப.நோ.கூ.ச.

கொடிகாமம், ஜூலை 16

கொடிகாமம் ப.நோ. கூ. சங்கக்கிளை (இல–1) அகதிகளுக்கான நிவாரணப் பொருள்களை தினமும் காலை ஆறு மணி முதல் இரவு ஒன்பது அல்லது பத்து மணிவரை விநியோகித்துவருகிறது.

இதுவரை இச்சங்க எல்லைக்குள்ளான சகலருக்குமான அரச நிவாரணம் சுமார் 1500 குடும்பங்களுக்கும் அகதிகளான அரச நிவாரணம் சுமார் 500 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இக்கிளை முகாமையாளர் திரு. சி. தருமலிங்கத்தை மக்கள் பாராட்டுகின்றனர். (இ–75)

வடக்கில்

## லண்டன் றன்பேர்லி நூல்நிலைய புத்தகங்களை விநியோகிக்க ஏற்பாடு

மானிப்பாய், ஜூலை 16

1987ஆம் ஆண்டுக்கான லண்டன் றன்பேர்லி நூல் நிலைய சேவையினரின் பயனுள்ள நூல்களைப் பெற விரும்பும் பொது சன நூல்நிலையங்கள், பாடசாலைகள் தமக்கு சேவையான நூல்கள் சம்பந்தமாக தம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சு.ஸ்ரீபாஸ்கரன் கேட்டுள்ளார்.

எதிர்வரும் அக்டோபர் மாதத்துக்குள் இந்த ஆண்டுக்கான நூல்கள் வந்து சேரும்.

1986ஆம் ஆண்டுக்கான நூல்கள் அண்மையில், உடுவில் மகளிர் கல்லூரி, நவாலி மகா வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, உடுவில் இராமநாதன் கல்லூரி, இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலயம்.சுண்டுக்குழி மகளிர் கல்லூரி–கொக்குவில் இந்துக் கல்லூரி, சென். ஹென்றீஸ் கல்லூரி, யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியவற்றுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. (இ-96)

அலெஸ் ஆணைக்குழு முன்

## சாட்சியமளிக்க விரும்புவோர் அரசஅதிபருடன் தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16

1987 மார்ச் 30 ஆம் திகதியன்று யாழ் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அலெஸ் கமிஷனின் முன் சாட்சியமளிக்கவிரும்பினால் யாழ் மாவட்டச் செயலாளரும் அரச அதிபருமான திரு. வை. மு. பஞ்சலிங்கத்துடன் உடனே தொடர்புகொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்.

தனி நபர் ஆணையாளரான முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஏ. வி. அலெஸ் இதற்காக யாழ்ப்பாணம் வர இருக்கிறார்.

யாழ் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் குறித்து விசாரணை நடத்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட இந்த தனி நபர் ஆணைக்குழு இம்மாதம் 23, 24, 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் வைத்து சாட்சியங்களைப் பதிவு செய்ய உள்ளது.

### அம்பாறையில் மோதல்

அம்பாறையில் உள்ள உலிவில் என்னும் இடத்தில் புலிகளுக்கும் இராணுவத்தார்கும் இடையில் நடைபெற்ற நேரடி மோதலில் நகுலன் என்பவர் உட்பட இருவர் உயிர் இழந்தார்கள்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (இ–160

### வீரவணக்கம்

வடமராட்சி, ஜூலை 16

செவ்வாய்இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றில் சூலன் (கோண்டாவில்) என்பவர் மரணமடைந்தார் இவருக்கு விடுதலைப் புலிகள் வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளார்கள். (இ–160)

சவளக்கடையில் பாதிக்கப்பட்ட

## தமிழ்-முஸ்லிம்களுக்கு நிவாரணம் வழங்குக

### பிரதி அமைச்சர் கோரிக்கை

அம்பாறை, ஜூலை 16

அம்பாறை மாவட்டத்திலுள்ள சவளக்கடைப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டதனால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்–முஸ்லிம் ஏழை விவசாயிகளுக்கு நிவாரண உதவியும், நஷ்டஈடும் வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதி தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சரும், சம்மாந்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு இது சம்பந்தமாக மகஜர் ஒன்றையும் அவர் அனுப்பிவைத்துள்ளார். (இ–21)

### மாநகரசபை அலுவலகங்கள் இடம் மாற்றம்

குருநகர், ஜூலை 16

யாழ். மாநகரசபை அலுவலகங்களில் ஒன்றான சிறுப்பியடிக் கிளை செவ்வாய் நண்பகல் 12 மணியில் இருந்து பருத்தித்துறைவீதி, நல்லூரில் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்ற புதிய யாழ். மாநகரசபைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இக்கிளையில் இயங்கி வந்த கணக்காய்வுப் பகுதி, சுகாதாரப்பகுதி, நாவித வரி, சோலை வரிப் பகுதிகளுடன் மின்மானி வாசிப்போர் பகுதியும் அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அம்மன் வீதி, இந்து விடுதி போன்ற வற்றில் இயங்கி வருகின்ற மராமத்து, சனசமூக நிலைய நிதி, சிறு வீட்டுக் கடன் போன்ற பகுதிகள் அவ்வவ் அலுவலகங்களிலேயே தொடர்ந்தும் இயங்கி வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் நன்மை கருதி

## கிளிநொச்சியில் எரிபொருள் விலையில் சிறிது மாற்றம்

கிளிநொச்சி, ஜூலை16

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயத் தேவைகளை முன்னிட்டு எரிபொருளின் விலையில் சிறிது மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோன். இவ் விலை மாற்றம் 9ஆந்திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த விலை மாற்றத்தின் மூலம் விவசாயிகள் நன்மை அடைவதுடன் தமக்கு தேவையான எரிபொருளையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கிளிநொச்சி மாவட்ட எரிபொருள் விலை நிர்ணயக் குழுவுக்கு தலைமை வகித்து உரை நிகழ்த்திய கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் (நிர்வாகம்) குழுவின் தலைவருமான திரு. எஸ். அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

கிளிநொச்சி கச்சேரியில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபன பிரதேச முகாமையாளர் திரு எஸ். சிவஞானம் வடபிராந்திய போக்குவரத்துச்சபை கிளிநொச்சி சாலை முகாமையாளர் திரு.சி அம்பலவாணர், மற்றும் பளை, பூநகரி,கிளிநொச்சிஉதவி அரசாங்க அதிபர்கள், கரைச்சி, வடக்குதெற்கு ப.நோ.கூ சங்கமுகாமையாளர்கள், தனியார் எரிபொருள் விற்பனவு உரிமையாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி 17 ரூபா 59 சதம் விற்ற பெற்றோல் 17 ரூபாவாகவும் 12 ரூபா விற்ற டீசல் 10 ரூபா 75 சத மாகவும் 10 ரூபா விற்ற மண்ணெண்ணெய் 9 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும். (இ–76)

இடம் பெயர்ந்தவர்களுக்கு

# கிடைக்கிற உதவி எதுவும் போதாதநிலை;இயன்றளவு உதவியை நல்குங்கள்

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை16

இடம் பெயர்ந்த மக்கள் அனைவருக்கும்,ஏழைகளுக்கும் சரி, வசதி படைத்தவர்களுக்கும் சரி உதவி தேவைப்படுகிறது ஆகையால் உங்களிடம் உதவி கேட்டு வரும் பல்கலைக்கழக மாணவர்களிடம் உங்களால் இயலக்கூடிய உதவியை நல்குங்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வழியாகத் தரப்படும் உதவிகள் மக்களுக்கு பேருபகாரமாக அமையும் அதே வேளையில் வடமராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் ஏற்பட்டுள்ள மக்களின் புலம் பெயர்வு காரணமாக, தற்போது கிடைக்கின்ற எந்த உதவியுமே போதாததாக உள்ளது.

இச் சூழ்நிலையில் புலம் பெயர்ந்து வந்த மக்கள் அனைவருக்குமே – அவர்கள் ஏழைகளாயினும் சரி வசதி படைத்தவர்களாயினும் சரி – உதவி தேவைப்படுகின்றது. உணவு, உடை, உறைவிட உபகரணங்கள் ஆகியவை அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன.

தென்மராட்சியிலும் அச்சுவேலி,ஆவரங்கால், புத்தூர், வலிகாமம் பிரதேசங்கள் ஆகியவற்றில் அமைந்துள்ள நூற்றுக்கணக்கான அகதி முகாம்களுக்கு இத்தகைய உதவிகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

நமது பல்கலைக்கழக மாணவர்கள் இப் பல்கலைக்கழகத்தின் மனப்பூர்வமான எண்ணத் துணிவுடன் உங்களிடம் உதவிகளைப் பெற்றுக் கொள்ள வருகின்றார்கள். அவர்களுக்கு உங்களால் இயலக் கூடிய உதவியை நல்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றது.

இந்த உடனடித் தேவைகளுக்கு உதவுகின்ற அதேவேளையில் பொருளாதாரத் தடைகள் எதுவுமின்றியே கடந்த சில ஆண்டுகளாக பல்வகை இம்சை, வதைகளுக்குட்படுத்தப் பட்டு தொடர்ந்து அல்லலுறும் கிழக்கிலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கும் உரிய உடனடி நிவாரணங்கள் வழங்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சம்பந்தப்பட்ட சகலரையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றது. (அ)

## கொத்தணி அமைப்பின் நோக்கம்பற்றி கல்வி அதிகாரி

முள்ளியவளை, ஜூலை 16

கொத்தணி அமைப்பு முறையைக் கல்வி அமைச்சு பரீட்சார்த்தமாக ஆரம்பித்துள்ளது. நான் இவ் வித்தியாலயத்தில் அதிபராக இருந்த பொழுது இங்கிருந்த எந்தப் பொருளும் இன்னொரு பாடசாலை பாவிக்க அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் தற்பொழுது அந்த நிலை மாறிவசதியும் முன்னேற்றமும் உள்ள பாடசாலை ஒன்றை மையமாக வைத்து அருகிலுள்ள பாடசாலைகளையும் அதனுடன் இணைத்து ஒவ்வொரு பாடசாலைகளும் ஏனைய பாடசாலைகளின் உபகரணங்களையும் பாவிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடந்த விளையாட்டுப் போட்டியின் போது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட முல்லைத்தீவு விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. கே. மகாலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில்:

இந்த அமைப்புமுறை வெற்றியளித்தால் இவ் வருட முடிவில் இலங்கையில் உள்ள ஏனைய பாடசாலைகளும் கொத்தணி அமைப்பின்கீழ் இயங்கும் என்றூர். (இ–93)

### இசைவேளாளர் சங்கம் அனுதாபம்

காங்கேசன்துறை, ஜூலை 16

''கல்வித்துறைக்கு மட்டுமன்றி, கலைத்துறைக்கும் பெரும் பணியாற்றிய வீமன்காமம் மகா வித்தியாலய அதிபர் மு. சிவராசாவின் மறைவு அளவிடமுடியாத மனக் கவலையையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தி விட்டது.''

அன்னாரின் மறைவையொட்டி இலங்கை இசை வேளாளர் சங்கத் தலைவர் திரு. என். ஆர். சின்னராஜா, செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் ஆகியோர் அவரது குடும்பத்திற்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர். (இ–68)

### ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு ஏற்பட்ட கதி!

காங்கேசன்துறை, ஜூலை 16

அல்வாயைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ். கணபதிப்பிள்ளை (60 வயது) கடந்த 7ஆம் திகதி படையினரால் சுடப்பட்டு கிணற்றில் தூக்கி வீசப்பட்டதாக அவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கிணற்றிலிருந்து அவரது சடலத்தை மீட்டு அருகில் போட்டு தகனம் செய்தபின் தாங்கள் அங்கிருந்து புறப்பட்டதாகவும் அவர்கள் கூறினர். (இ–68)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 . 06 . 1937



இறப்பு 16 . 07 . 1986

## திருமதி றீற்று அலோசியஸ்

உதிரத்தையே பாலாய்த் தந்து உயிர் கொடுத்த தெய்வமே! — நீ மறைந்து எங்களுக்குள்ளேயே நிறைந்து விட்டாயே! எம் நினைவே நீயாகி விட்டாய் அம்மா!

ஆண்டவன் பாதபீடத்தமரும் ஒவ்வொரு நாளுமோர் பூவாய் மலர்வாய்.

ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி தேவாலயத்தில் திவ்விய பூசைப்பலி கொடுக்கப்படும். உமது நினைவில் வாழும்

கணவர் அலோசியஸ் அன்புப் பிள்ளைகள்

மேரி பற்றிமா, பத்மதாஸ் [பிரயான முகவர்],அமலதாஸ்[கனடா], தேவதாஸ் [சவூதி], யேசுதாஸ் [சவூதி] நிர்மலதாஸ், மேரி கிறிஸ்ரினா, அன்ரோனியா, யூலியானா, அன்ரனிதாஸ், சின்னராசா [மருமகன்] பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

காலையடி, பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

மனிதனுக்கு மனோபலமே பெரிது. யானை பெரிதாக இருந்தாலும் சிங்கக்குட்டி அதனைக் கொல்லும்.

— பஞ்சதந்திரம்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
16.07.1987 த.பெ.இல: - 23

# யாரை ஆளுவதற்காக அர்த்தமற்ற போர்?

மே மாதக் கடைசியில் வடமராட்சியைக் கைப்பற்றிய பின்னர், இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு விட்டதாக பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்திருந்தார்.

''ஒப்பறேஷன் குட்வில்''லை (நல்லெண்ணச் செயற்பாட்டை) நடைமுறைப்படுத்துவதுதான் தமது அடுத்த பணியாக இருக்கும் என்றார் அவர். சிவில் நிர்வாகத்தை உண்டாக்கி மக்களுக்கு உதவி புரிந்து, சலுகைகளைச் செய்து அவர்களின் மனங்களைக் கவர்வதே அமைச்சர் விவரித்த அடுத்த பணி.

முதலில் வடமராட்சி மக்களினதும், படிப்படியாகக் குடாநாட்டுத் தமிழ் மக்களினதும் உள்ளங்கவர் கள்வனாக மாறும் முயற்சியில் அமைச்சர் லலித் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனல், அவர் கூறியதைச் செயற்படுத்தும் விதத்தில் சிப்பாய்கள் வடமராட்சி மக்களோடு ஆதரவாகப் பழகியதாகக் கேள்விப்பட்டதில்லை. அவர்கள் தமது ''இராணுவத் தனத்தைக்'' காட்டி மக்களை இம்சைப் படுத்திய சம்பவங்களே அதிகம் இடம்பெற்றன. நீங்கள் புலிகளுக்கு ஆதரவு நல்கியவர்களா? என்று கேட்டுப் பல பொதுமக்களை இம்சைப் படுத்தினர்கள். பல வீடுகளில் இருந்த பொருள்கள் சூறையாடப்பட்டதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டன. இன்னும் வழமையான இராணுவக் குணும்சங்கள் பல பிரதிபலிக்கப்பட்டன.

பொலீஸ் நிலையத்தையும், தொலைபேசியையும், வங்கிகளையும் செயற்பட வைத்து ஏதோ சிவில் நிர்வாகம் அங்கு தடல்புடலாக நடப்பதாகக் காட்டிக் கொள்ளப்பட்ட போதிலும் மக்கள் தொடர்ந்து பீதியுடனேயே வாழ்ந்தனர்.

அமைச்சரின் ''நல்லெண்ணச் சக்கரம்'' மக்களைச் சரியாகக் கவர்வதற்கு முன்னர், அவர் கைப்பற்றிய பகுதியை ஸ்திரப்படுத்தும் வேலையைச் செய்ய வேண்டியதாயிற்று. புலிகளின் நெல்லியடித் தாக்குதல், ஆயுதப்படைகள வடமராட்சியில் கண்ட வெற்றியை ஈடாடச் செய்தது. அவர்களை நிலைதளர வைத்தது. அதற்குப் பதிலாக மீண்டும் இராணுவத் தாக்குதல்களை அரசு ஆரம்பித்திருக்கிறது.

வடமராட்சியில் எச்ச சொச்சமாய் இருந்த மக்களும் சூடு கண்ட பூனைகளின் நிலையில் வெளியேறிவிட்டார்கள் இப்போது அது மக்கள் இல்லாத பிரதேசமாகிவிட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வளர்மிக்க செழிப்பு நிறைந்த, செல்வம் கொழிக்கும், கல்வி அறிவு மிளிரும் பகுதியாக இருந்த வடமராட்சி, மக்கள் அரவமே இல்லாத சூன்யப் பிரதேசமாகி விட்டது. போரின் தழும்புகள் நிறைந்த மயான பூமியாக அது மாறி விட்டது. இப்போது அது முழுக்க முழுக்க யுத்த பிரதேசம் தான்!

ஆனல் அரசு தனது தோல்வியை ஒப்புக் கொள்ள மறுத்துத், தொடர்ந்து இராணுவத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. தான் நடத்தும் யுத்தத்தில் போராளிகளை வென்று கைப்பற்றிய பகுதியை ஸ்திரப்படுத்த முயற்சிக்கிறது, பாவம்!

அந்தப் பயனற்ற முயற்சியில் அது வென்ருலுங் கூட, நிலத்தை வைத்து என்ன செய்யப் போகிறது? மக்கள் இல்லாமல் யாரை ஆளப் போகிறது? இராணுவ நடவடிக்கைகளுக்கு முழுதாக முற்றுப்புள்ளி வைத்து அரசியல் தீர்வு ஒன்று ஏற்படும் வரை வடமராட்சி மக்கள் அங்கு திரும்பப்போவதில்லை. அப்படியானல் அரசு அந்தப் பகுதியை ஸ்திரப்படுத்தி என்ன பிரயோசனம்? வடமராட்சியை மக்கள் இல்லாத பாலைவனமாக்கி, அந்தப் பாலைவனத்தை ஆளப் போகிறதா? அல்லது திருமலை, அம்பாறையைப் போல அங்கும் சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றும் சதி நோக்கமா?

மக்கள் இல்லாத ஒரு பகுதியில் அரசு நிலை கொண்டு விட நினைப்பது போன்ற சுத்த முட்டாள் தனம் வேறு எதுவும் இருக்கமுடியாது.

அங்கு நிலை கொள்ளுவதற்காக முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளையும் அரசு கலக்கி அடிப்பது ஏனே? வடமராட்சியில் பலி கொள்ள முடியாத மக்களை அந்த இரண்டு பகுதிகளிலும் இரத்த வேட்டையாடவா? தனது நரபலி நாடகத்தை அந்தப் பகுதிகளிலும் அரங்கேற்றவா?

அரசியல் தீர்வை நாடும் அரசு ஒன்று செய்யக்கூடிய அட்டூழியமா இவை? இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே அரசின் இலட்சியம் என்று கொழும்பு ஆட்சியாளர் அடிக்கடி சொல்வது எவ்வளவுக்குப் பொய் என்பதற்கு இது மற்றும் ஓர் உதாரணம். இராணுவ அம்சங்கள் கலந்த அரசியல் தீர்வு நடவடிக்கை என்று அத்துலத்தார் அலம்புவது இதைத்தானே?

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு!

## 72 பேர் பலி! 250 பேர் காயம்!!

கராச்சி, ஜூலை 15

கடந்த செவ்வாய்க் கிழமை கராச்சியில் அடுத்தடுத்து ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களில் குறைந்தது 72 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இருநூற்றி ஐம்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

வர்த்தக நிலையங்கள் நெருக்கமாக அமைந்துள்ள இடத்திலேயே இக்குண்டுகள் வெடித்தன என்று செய்திகள் தெரிவித்தன.

இதனுல் வர்த்தக நிலையங்கள் தீப்பிடித்துக் கொண்டன. வாகனங்களும் தீப்பற்றிஎரிந்தன.

பதினைந்து நிமிடஇடைவெளியில் இரண்டு குண்டுகள் வெடித்தன என்று பி.ரி.ஐ. அறிவித்தது.

ஆனல் நான்கு குண்டுகள் வெடித்தன என்று ஏ.பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

ஒரு உணவு விடுதியின் முன் நிறுத்தப்பட்டிருந்த காரில் இக் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன என்று சில செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவத்துக்கு எவரும் இன்னும் உரிமை கோரவில்லை. (உ-எ)

## பொலீஸார் சுட்டதில் மூவர் பலி!

சென்னை, ஜூலை 15

காமராஜர் மாவட்டத்தில் சிவகாமிபுரம் என்னும் கிராமத்தில் பொலீஸார் சுட்டதில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரின் கொலை தொடர்பாக சந்தேக நபர்களைக் கைது செய்யச் சென்ற பொலீஸ் கோஷ்டி மீது தாக்குதல் நடத்தப்பட்டதாம்.

அதைத் தொடர்ந்து பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். (உ-எ)

## பங்களாதேஷ் அரசுக்கு எதிர்க்கட்சிகள் காலக்கெடு விதிப்பு

டாக்கா, ஜூலை 15

பிரச்சினைக்குரிய ஜில்லா பரிஷத் சட்டமூலத்தை விலக்கிக்கொள்ள எதிர்க்கட்சிகள் கூட்டணி பங்களாதேஷ் அரசுக்கு ஐந்துநாள் காலக்கெடு விதித்திருக்கின்றது.

அப்படி விலக்கிக் கொள்ளத் தவறும் பட்சத்தில் பெரிய அளவில் தேசிய வேலைநிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று எதிர்க்கட்சிகள் கூட்டணித் தலைவி வாஜிஜு பேகம் எச்சரித்துள்ளார்.

டாக்காவில் நடந்த பேரணிஒன்றில் பேசுகையிலேயே வாஜிஜு பேகம் இக் காலக்கெடுவை அறிவித்தார்.

இராணுவ அதிகாரிகளும் அங்கம் வகிக்கக் கூடியதாக ஜில்லா பரிஷத் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதனுல் இச்சட்ட மூலம் விலக்கிக் கொள்ளப்படவேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் கடந்த சில தினங்களாக டாக்காவில் வேலை நிறுத்தத்தை நடத்தி வருகின்றன. (உ-எ)

## இராஜினமா

புதுடில்லி, ஜூலை 15

இந்திய மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் முக்தி முகமது செயத் தனது பதவியை இராஜினமாச் செய்தார்.

மத வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாக திரு செயத், தனது இராஜினமாக் கடிதத்தில் குறறஞ்சாட்டி இருக்கின்றர்.

தொடர்ந்து இந்திரா காங்கிரஸில் இருந்து சேவையாற்றப் போவதாகவும் செயத் தெரிவித்தார். (உ-எ)

## வேலை நிறுத்தம் தொடர்கிறது

டாக்கா, ஜூலை 15

பங்களாதேஷில் தொடர்ந்து மூன்றுவது நாளாக வேலைநிறுத்தம் செவ்வாய்க்கிழமைநடைபெற்றது.

டாக்கா நகரம் இதனுல் வெறிச்சோடிக் காணப்பட்டது.

எட்டு எதிர்க் கட்சிகளின் கூட்டணியும் 22 மாணவர் அமைப்புகளும் இந்த வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விட்டிருந்தன. (உ-எ)

வெளி உலகில்

## நிக்கோறேட் இவ்வாரம் வந்து சேரும்

சென்னை, ஜூலை 15

நான்காவது உணவுக் கப்பல் வியாழன் சென்னையில் இருந்து காங்கேசன்துறைக்குப் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

'நிக்கோறேட்' என்ற இக்கப்பல்ஆயிரம்தொன் உணவுப் பொருள்களைக் கொண்டுசெல்லும்.

இக்கப்பலில் உணவுப் பொருள்கள் ஏற்றப்படுவதை சென்னையிலுள்ள ஸ்ரீலங்கா தூதரக அதிகாரிகளான திரு. ஜெயசிங்க, ஜனப். பஜீத் ஆகியோர் பார்வை இட்டனர். (இ-எ)

## எல்லைக்காந்தி நிலைமை மோசம்

புதுடில்லி, ஜூலை 15

91 வயதான எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கானுக்கு கடந்த திங்கள் நுரையீரலில் வருத்தம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து அவரின் உடல் நிலைமை மோசமடைந்தது.

கடந்த பதினெரு நாட்களாக எல்லைக் காந்தி மயக்க நிலையில் புதுடில்லிஅரசுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றர். (இ-எ)

## பாதுகாப்பு வலயம் வேண்டுமாம்

புதுடில்லி, ஜூலை 15

இந்திய – பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஏற்படுத்தும்படி இந்திய அரசை, பாரதியஜனதாக் கட்சி கேட்டுள்ளது.

தீவிரவாதிகள் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவல் செய்வதைத் தடுத்து நிறுத்த இதுவே ஒரே வழி என்றும் கட்சி தெரிவித்துளளது (உ-எ)

## 38 வருடங்களின் பின் இராணுவச் சட்டம் தைவானில் நீக்கம்

தைப்பே, ஜூலை 15

தைவானில் 38 ஆண்டுகளாக அமுல் நடத்தப்பட்டுவந்த இராணுவச் சட்டம் செவ்வாய் நள்ளிரவுடன் நீக்கப்பட்டு விட்டது.

தேசியப் பாதுகாப்புச் சட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்தே, இராணுவச் சட்டம் நீக்கப்பட்டது.

இராணுவச் சட்டத்தில் உள்ள கடுமையான அம்சங்கள், தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே இராணுவச் சட்டம் வேறு ரூபத்தில் அமுல் நடத்தப்படவுள்ளது- இப்படி எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (உ—எ)

## அரசமைப்பு மூலம் நிர்வாகரீதியில்

# தமிழர் பிரதேசம் என கிழக்கை ஏற்றுள்ளோம்

## அதைக் குழப்புவது தவறு

- தொண்டமான்

அமைச்சர் தொண்டமான் (12-7-87) கொழும்பு 'சண்டே ஐலண்ட்' பதிப்புக்கு அளித்த பேட்டியில் மூன்றுவதுபகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: இனப் பிரச்சினைக்குத் தீர்வு விரைவில் கிடைக்குமா அல்லது காலம் எடுக்குமா? உங்கள் கருத்து என்ன?

தொண்டா: உதட்டுக்கும் ரோப்பைக்கும் உள்ள நெருக்கத்திலும் பார்க்க வேறு ஒன்றுமே இல்லை. இப்படி ஒரு பழமொழி உண்டு.

பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு மிக நெருங்கிய நிலையை இணைப்பு-சி ஏற்படுத்தியது. அது எப்படி தட்டிப் பறிக்கப்பட்டது என்பதைப் பார்த்தீர்களா? அது அப்படியே மறைந்து விட்டது.

கேள்வி: அளவு கடந்த உணர்ச்சியுடன் இந்தியா நடந்து கொள்வதாகக் கூறினீர்கள். விமானம்மூலம் உணவுப் பொதிகளைப் போட்டது அதன் வெளிப்பாடா?

தொண்டா: அவர்களின் நடவடிக்கைகள் பற்றி தீர்ப்புக் கூறுவது எமது வேலை அல்ல.

கேள்வி: காரணங்கள் எப்படியிருந்தாலும் இந்தியா, இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை மீறி நடந்து கொண்டது என்பதில பொதுக் கருத்து உடன்பாடு ஒன்று காணப்படுகின்றதே!

தொண்டா: இதுஎல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய விஷயங்கள். ஏனைய அம்சங்களுடன் இவற்றை இணைத்துப் பார்க்க வேண்டும். இலங்கையில் உள்ளசிறுபான்மையினர் போன்று தனது வரையறையை இலங்கையும் உணர்ந்துள்ளது.

கேள்வி: அப்படி என்றல் இந்திய நடவடிக்கையைக் கண்டிக்க எமக்கு உரிமை கிடையாதா?

தொண்டா: அவர்களின் நடவடிக்கை பற்றி நாம் தீர்ப்புக்கூற முடியாது. இந்தியாவை மத்தியஸ்தராக நாம் வைத்துள்ளோம். மத்தியஸ்தரின் பணியை இந்தியா மேற்கொள்ள வேண்டும் நாம் எதிர்பார்க்கும் நிலை இருக்கும் வரை, மத்தியஸ்தரின் நடவடிக்கைகள் பற்றி நாம் தீர்ப்புக் கூற முடியாது.

கேள்வி: இந்த இரண்டு விஷயங்களும் தனித்தனியானவை இல்லையா? மத்தியஸ்தர் போன்று இந்தியா நடந்து கொள்ளவில்லை என்று இலங்கை சரியான எரிச்சலுக்குள்ளாகி இருக்கிறது.

தொண்டா: இது எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்பான விஷயங்கள் இல்லையா? இந்தியாவின் மத்தியஸ்தத்தை நாம் இன்னும் நாடுகின்றோம் என்பதைத்தானே இது எடுத்துக்காட்டுகின்றது.

கேள்வி: இப்பிராந்தியத்தில் தான் ஒரு சிறுபான்மை என்ற வரம்பை உணர்ந்துதான் இலங்கை இப்படி நடந்து கொள்கின்றது- இது தான் உங்கள் அபிப்பிராயம்?

தொண்டா: அவர்கள் (இலங்கை) எப்போதும் இப்படித்தான் உணர்கின்றர்கள். இந்த நாட்டில் அவர்கள் பெரும்பான்மையாக இருந்தும், சிறுபான்மையினர் என்ற தாழ்வு மனப்பான்மை அவர்களுக்கு உண்டு.

இந்தியாவில் தமிழர் பெரும்பான்மையாக இருக்கின்றர்கள் என்று அவர்கள் கருதுகின்றனர்.

அரபு நாடுகளில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கின்றனர் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

சிறுபான்மை என்ற தாழ்வு மனப்பான்மையால் பெரும்பான்மையினர் அவஸ்தைப்படுகின்றனர்,

கேள்வி: தாழ்வு மனப்பான்மையால் அவதிப்படுகின்ற சிறுபான்மை போன்று நீங்கள் இருப்பதாக சிலர் சொல்கின்றர்கள். கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் வாழ உரிமை இல்லை என்று நீங்கள் சொன்னதாகத் திரு. தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் பேசியிருந்தார். இது அதற்கு ஒரு உதாரணம்

தொண்டா: அந்த மாகாணத்திலுள்ள சமூகங்களின் இயற்கையாக அமையப்பெற்ற விகிதாசாரத்தை குழப்பியடிக்கும் விதத்தில் வெளியாரைக் கொண்டு போய்க் குவிப்பது பிழை என்று நான் சொன்னேன். உண்மையில், அப்பகுதிகள் தமிழ்பேசும் பகுதிகள் என்று நிர்வாக ரீதியில் 1972, 1978 அரசமைப்புச் சட்டங்களினுல் ஏற்றுக் கொள்ளப்பட்டன. நான் அரசமைப்பில் காணப்படும் உண்மை நிலையைத்தான் சொன்னேன்.

(வளரும்)

## இந்திய மருந்துகள் இறக்குமதி நிறுத்தப்படுமா?

கொழும்பு, ஜூலை 16

விமான அத்துமீறல் நடத்திய இந்தியாவில் இருந்து மருந்து வகைகளை இறக்குமதி செய்வதா?

இது பற்றி பொதுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துச் செயற்படுத்துவது பற்றி ஆலோசனை நடத்த அரச, தனியார் மருந்து இறக்குமதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் நாளை வெள்ளிக்கிழமை கூடவுள்ளனர்.

இந்தியாவில் இருந்து மருந்துவகைகளை இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டும் என்று சுதந்திர வைத்திய அதிகாரிகள் சங்கம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே, இக்கூட்டம் கூட்டப்படுகிறது.

இலங்கை இறக்குமதி செய்யும் மூவாயிரத்துக்கு அதிகமான மருந்து வகைகள் இந்தியாவில் இருந்து வருகின்றன.

இவற்றில் சிலவற்றைக் குறைந்த விலையில் சீன. தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய முடியும் என்று வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் அரசுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசுக்குச் சமர்ப்பிப்பதற்காக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளின் பட்டியல் ஒன்றை அரச மருந்துக் கூட்டுத்தாபனம் தயாரித்து வருகின்றது.

இப்படி கூட்டுத்தாபனப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

## ரயில்பாதை சீர்குலைவு

யாழ்-சிறும்பியடிப் பகுதியில் ரயில்ப் பாதை சீர்குலைக்கப்பட்டுள்ளது கற்களும் சிலிப்பர்க் கட்டைகளும் அகற்றப்பட்டு வருகின்றன. (உ-சி)

## பொய்யாமொழி



**குறள்:**

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்.

**பொருள்:**

ஒருவனுடைய குணங்களை ஆராய்ந்து பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து, மிகுதியானவை எவையென ஆராய்ந்து, மிகுந்திருப்பவற்றால் தெளிந்து கொள்ள வேண்டும்.

## வித்தாரம்

முரளித் தம்பி வந்தாச்சுப்போலை. அது சரி, நேற்றைக்கு ஆஸ்பத்திரி விஷயம் கொஞ்சம் சொல்லிப்போட்டு நிப்பாட்டிப் போட்டேன்,

ஆஸ்பத்திரிக்கு முந்திக் குடுக்கவெண்டு இருந்த அம்புலன்ஸை போதனு வைத்தியசாலையின் அமைச்சு இஞ்சை அனுப்பாமல் நிறுத்தி வைச்சிருந்தது. அந்த அம்புலன்ஸை இப்ப குடுக்க முன்வந்திருக்குது.

திடீர் எண்டு உந்த நல்மனம் வந்ததுக்கும் சரியான காரணம் இல்லாமல் இல்லை!

யாழ். ஆஸ்பத்திரிக்கெண்டு இப்ப ஒரேயொரு அம்புலன்ஸ் தான் இருக்குது. நிமிஷத்துக்கு ஒருநோயாளி, செக்கண்டுக்கு ஒரு மரண ஆபத்து எண்டு காலம் போய்க்கொண்டு இருக்கையிக்கை, உந்தப் பெரிய ஆஸ்பத்திரிக்கு ஒரு அம்புலன்ஸ் போதுமே...?

உந்தப் பெரிய ஆஸ்பத்திரிக்கு ஒரு அம்புலன்ஸ் தான் இருக்குது எண்ட விஷயம் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துக்குஎப்பிடியோ தெரிய வந்திட்டுது. அவை தாங்கள் ஒரு அம்புலன்ஸை கொழும்பு மூலம் அனுப்பிறது பற்றித் தங்களுக்குள்ளை கதைச்சிருக்கினம்.

இது இஞ்சை நிக்கிற கொழும்புச் செஞ்சிலுவைக்காரர் மூலம் அரசாங்கத்துக்கு எட்டி விட்டுது. உணவுப் பொருள் நிவாரணம் தான் குடுக்கினம் எண்டால்,வாகன நிவாரணமும் குடுக்க இடங்கொடுத்து விடக்கூடாது எண்டு நினேச்சு, முந்தி நிப்பாட்டி வைச்ச அம்புலன்ஸை அனுப்பி வைக்க முடிவு செய்திருக்குதாம் போதனு வைத்தியசாலைகள் அமைச்சு!

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியள் இஞ்சை வந்த புண்ணியத்தாலை யாழ்ப்பாணச் செஞ்சிலுவைச் சங்கத்துக்குப் ஒரு அம்புலன்ஸ் கிடைக்கப் போகுது...!

★ ★ ★

பார்த்தனுக்கு உபதேசம் செய்த கண்ணனின் இராச்சியம் துவாரகை எண்டு மகாபாரதம் சொல்லும். அந்தத் துவாரகையைக் கண்டுபிடிச்சு விட்டினம் பாக்கயில்லையே.

கிருஷ்ண பரமாத்மாவின் துவாரகை கடலுக்குக் கீழே மூழ்கிவிட்டதாக ஐதீகம் உண்டு அந்த ஐதீகம் இப்போது உண்மையாகி விட்டது

கடல் ஆராய்ச்சி செய்தவர்கள் கடலுக்கு அடியிலை மூழ்கியிருந்த துவாரகையைக் கண்டுபிடிச்சிருக்கினம். பாரதத்தில் சொல்லப்பட்டிருப்பது போலவே அது பெரும் கலை அம்சங்கள் நிறைந்த அழகிய நகரம் என்பதற்கான ஆதாரங்கள் கிடைச்சிருக்குதாம். மொகஞ்சதாரோ காலத்து சில எழுத்துக்கள், கல்வெட்டுக்கள் எல்லாம் கடலுக்கு அடியிலையிருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கு.

★ ★ ★

இராணுவ அட்டூழியங்களோடை தமிழ்ப் பகுதியளிலை முக்கிய சேவைகள்கூடத் தடைப்பட்டுப் போய்க் கிடக்குதுகள். உரிய நிதி வசதியள் இல்லை; உபகரண வசதியள் இல்லை எண்டு அந்தச் சேவையள் எல்லாம் ஸ்தம்பித்துப் போய்க் கிடக்கின்றன.

சுகாதார சேவையும் அதிலை ஒண்டு. உந்தக் குறைபாட்டையும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி நாடி பிடிச்சவன் எல்லாம் வைத்தியன் எண்ட நிலை வந்திருக்கு அதாலை சனம் மேலும் மேலும் நோயாளிகள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ் கோபால்ஸ்
(தற்காலிக இடம்மாற்றம், மயூரா சென்ரர் உட்புறம்)
திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுப் பிடவைகளைப் ★
பெற்றுக்கொள்ளலாம்.
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

16-07-1987 வியாழக்கிழமை

சகலவித
ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ வடமராட்சியைச் சேர்ந்த

# ஒன்றரை இலட்சம் பேர் அகதிகளாகியுள்ளனர்

கொடிகாமம், ஜூலை 16

வடமராட்சியிலிருந்து சுமார் 37 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஏறத்தாழ ஒன்றரை லட்சம் மக்கள் தங்கள் வீடுவாசல்கள், உடைமைகளை இழந்து அகதிகளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் சுமார் மூன்றில் இருபகுதியினர் தென்மராட்சிப் பகுதியில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். அவர்கள் அதிகமாக தென்மராட்சி கிழக்குப் பகுதிகளான கொடிகாமம், வரணி, நாவற்காடு, கச்சாய், அல்லாரை முதலிய இடங்களில் தங்கியிருக்கின்றனர்.

ஒரு பகுதியினர் பளை, பச்சிலைப்பள்ளி, முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். இந்த அகதிகள் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் பொது நிலையங்களிலும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் சிலர் மரங்களின் கீழும் தஞ்சமடைந்துள்ளனர். (உ-75)

ராஜீவின் நெருங்கிய உறவினரான

## அருண்நேரு உட்பட மூவர் விலக்கப்பட்டனர்

புதுடில்லி, ஜூலை 15

பிரதமர் ராஜீவ் காந்தியின் நெருங்கிய உறவினரும் முன்னாள் இணை உள்துறை அமைச்சருமான அருண்நேரு இந்திரா காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

கட்சிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதற்காகவே அவர் வெளியேற்றப் பட்டார் என அறிவிக்கப்பட்டது.

திரு. வி. சி. சுக்லா, ஜனுப் ஆரிப் முகமட் கான் ஆகியோரும் இவருடன் சேர்த்து வெளியேற்றப்பட்டனர். (உ-எ)

டாக்டர்கள் வேலை நிறுத்தம்:

## கொழும்பு ஆஸ்பத்திரி சேவைகள் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 16

அரச வைத்திய அதிகாரிகளின் வேலை நிறுத்தத்தினால் கொழும்பு ஆஸ்பத்திரிகளில் வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டன.

ருகுணையில் உள்ள தனியார் வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்குப் பட்டம் வழங்குவது சம்பந்தமான தகராறைத் தொடர்ந்தே, அரச வைத்திய அதிகாரிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையில் வைத்திய சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அவசரகாலச்சட்டத்தின் கீழ் அரசு பிரகடனப் படுத்தியுள்ளது.

இப்பிரகடனம் தங்களின் வேலைநிறுத்தத்தை எவ்வகையிலும் பாதிக்காது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை யாழ் ஆஸ்பத்திரியில் வைத்திய சேவைகள் எதுவும் பாதிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## இப்படி ஒரு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடமராட்சியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் வந்து குடியமரும்படி யாழ்ப்பாணம் வானொலி நேற்றுக்கேட்டுக்கொண்டது.

வர்த்தக நிலையங்களை மீண்டும் திறந்து வியாபாரம் நடத்தும்படி யாழ்ப்பாணம் வானொலி மேலும் அறிவித்தது. (உ-எ)

### வித்தாரம் - - -

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆகுதுகள். சில வேளை உயிராபத்தும் வந்து விடுகுது.

கிளிநொச்சியின் தெற்குப் பகுதியிலை ஒரு இளம் தாயின் உயிர் வீணாப் பறிபோயிட்டுது எண்டு தகவல்!

தனியார் மருத்துவமனையில் பயிற்சியே இல்லாத மருத்துவிச்சி, தொற்று நீக்காத ஆயுதங்களைப் பாவிச்சு பிரசவத்தை மேற்கொண்டதாலை ஏற்பட்ட அநியாயச்சாவு! உப்பிடி வெளிச்சத்துக்கு வராமல் எத்தினை அநியாயங்கள் நடக்குதோ...!!



### சுயாட்சி - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வழங்க முடியாமல் இருப்பதற்கான காரணத்தை ஜனாதிபதி ஜே. ஆர். எடுத்துக் கூறியதாகவும் அறியப்படுகிறது.

இதற்கு முன்னர் இரண்டு சுற்றுப் பேச்சுக்களை அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடன் இந்தியத் தூதர் நடத்தினார். அமைச்சர் காமினி திஸநாயக்காவையும் ஒரு முறை இந்தியத்தூதர் சந்தித்துப் பேசினார்.

இவற்றின் பின்னரே டிக்ஸிற்—ஜெயவர்த்தனா சந்திப்பு இடம்பெற்றது. (அ-உ-எ)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 16-07-1987.

P ted and Published by New Uthayan Publi ions (Pvt) Ltd at 293/2 Navalar Road Jaffna on Thursday July 16, 1987

## ஆயுதம் ஏந்துவதாயின் யாழ் செல்லுங்கள்!

### மலையக இளைஞர்களிடம் தொண்டா வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 16

மலையகத் தமிழ் இளைஞர் துப்பாக்கி ஏந்திப் போராட விரும்பினால் யாழ்ப்பாணம் போய் விடுங்கள். செலவுக்கு பணம் நான் தருகின்றேன்.

—இப்படிச் சொன்னார் அமைச்சர் தொண்டமான்.

அப்புத்தளையில் நடந்த கூட்டத்தில் பேசுகையிலேயே அமைச்சர் தொண்டமான் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

168 யு. என். பி. எம்பிக்கள் மத்தியில் தன்னந்தனியனாக நின்று தொண்டமான் என்ன சாதிக்கப் போகின்றார் என்று கேலி செய்தவர்கள் இன்று வாயடைத்து நிற்கின்றனர்.

தொண்டமான் சொற்படிதான் அரசு நடக்கின்றது என்று கூறுகின்றனர். இந்தப் பெருமை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கே உரியது.

— இப்படி திரு. தொண்டமான் சொன்னார். (உ-எ)

### புலமைப்---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

டத்தில் இப்பரீட்சை நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்—

— இப்படி யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்திருக்கின்றது. (உ-எ)

### இலங்கையில் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யாழ் குடா நாட்டில் போட்டதன்மூலம் இலங்கையின் இறைமை, பிரதேச கௌரவம் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பட்டினி நிலை இல்லை உணவுப் பொருள்களை இந்தியா வழங்குவது தீவிரவாதிகளை உற்சாகப்படுத்துவதாகவே அமையும்.

-இப்படி பிரதமர் பிரேமதாஸ சொன்னார்.

அனுமதியின்றி இந்தியா விமானமூலம் நிவாரண உதவி வழங்கியிருந்தால் அது இலங்கையின் இறைமையை மீறிய செயலாகும்—என்று திருமதி தாட்சர் பதிலளித்தார் என இலங்கை வானொலி நேற்று தெரிவித்தது. (உ-எ)

### தலையணை மாற்றினால் - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தூக்கமின்மை. உயர் இரத்த அழுத்தநோய்களில் இருந்து பெருமளவு சுகமடைந்ததாகக் கூறினர்.

இப்படி சீன செய்திச் சேவை அறிவித்து உள்ளது.

ஷியான் என்னும் இடத்தில் உள்ள மருந்து தயாரிப்பு நிறுவனம் இப்படித் தயாரிக்கப்பட்ட ஒரு லட்சம் தலையணைகளை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்து உள்ளது.

ஜப்பான், மலேஷியா ஆகிய நாடுகளும் இத்தலையணைகளை இறக்குமதிசெய்ய ஆடர் கொடுத்து உள்ளன.

—இப்படி சீன செய்திச் சேவை மேலும் தெரிவித்தது

தலையணையின் விலை எவ்வளவு என்று அச்செய்தியில் குறிப்பிடப்படவில்லை. விலையைக் கேட்டால் தலையிடி வந்து விடும் என்றோ!! (உ-எ)

### மீரட்டில் குண்டுவெடிப்பு

புதுடில்லி, ஜூலை 16

உத்தரபிரதேசத்தில் மீரட் நகரில் நேற்றுக் காலை குண்டு ஒன்று வெடித்ததில் நான்கு பேர்கொல்லப்பட்டனர். மூன்று பேர் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து காலவரையற்ற ஊரடங்குச் சட்டம் மீரட் நகரில் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. (உ-எ)

### வின்சென்ட் மீண்டும் அமைச்சராவார்

கொழும்பு, ஜூலை 16

கொழும்பு வடக்கு எம். பியாக மீண்டும்நியமிக்கப்பட்ட திரு. வின்சென்ட் பெரேரா மீண்டும் விளையாட்டுத்துறை, நாடாளுமன்ற விவகார அமைச்சராக நியமிக்கப்படுவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஐ. தே. க. தலைமை அலுவலகமான ஸ்ரீ கோதாவுக்குச் சென்று எம். பி. நியமனத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறும் பிரகடனத்தில்திரு. வின்சென்ட் பெரேரா கையொப்பமிட்டார்.

மீண்டும் பதவியை ஏற்றுக்கொண்டதற்கான காரணம் எதனையும் திரு. வின்சென்ட் பெரேரா வெளியிடவில்லை. (உ-எ)

### வீரவணக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை16

கடந்த 12 ஆம் திகதி மாலை வடமராட்சியில் இடம் பெற்ற நேரடி மோதலின் போது வீரமரணமடைந்த இரண்டாம் லெப்டினன்ட் அனுராவிற்கும் (பரமரட்சகபாலன்—யாழ்ப்பாணம்) —

அதே தினம் இடம் பெற்ற வெடி விபத்தின் போது காயமடைந்து நேற்று வீரமரணமடைந்த ஹனிபாவிற்கும் (அபுசாலி—அக்கரைப்பற்று) வீரவணக்கம் தெரிவித்து விடுதலைப் புலிகள் அறிக்கை விடுத்திருக்கின்றனர். (உ)

## வடமராட்சியில் 6 பரீட்சை நிலையங்கள் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

எதிர்வரும் ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சைக்கு வடமராட்சியில் அமைக்கப்பட்ட ஒன்பது பரீட்சை மண்டபங்களில் ஆறு இடம் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது

இது தொடர்பாக யாழ் கல்வித் திணைக்களம் விடுத்துள்ள அறிவித்தலில் கூறப்பட்டிருப்பதாவது;

1. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்த மண்டபம் 1,2,3 ஆகியன கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும்-

2. நெல்லியடி ம.ம.வி மகளிர் கல்லூரி மண்டபமும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபமும் வதிரி இருதயக் கல்லூரிக்கும்-

3. புலோலி மெ. மி. த. க. பாடசாலை மண்டபம் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்துக்கும் மாற்றப்பட்டு உள்ளன.

**பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை மண்டப மாற்றம்:**

யாழ் மாவட்டத்தில் இருந்து (வடமராட்சி உட்பட) உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பித்து, பின்பு வேறு மாவட்டத்தில் பரீட்சை எழுதுவதற்கு கல்விச் செயலாளருக்கு விண்ணப்பித்த பாடசாலைப் பரீட்சார்த்திகள்—தமது விருப்பம் அதுவானால்—அவர்கள் தோற்ற விரும்பி இருக்கும் மாவட்டக் கல்விப் பணிப்பாளரை, தமது பிரவேச அட்டைகளுடன் சந்திக்க வேண்டும்.

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலைப் பரீட்சார்த்திகள்யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுத விரும்பினால் தமது பிரவேச அனுமதி அட்டையுடன் யாழ் கல்விப்பணிப்பாளரை இம்மாதம் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு சந்திக்க வேண்டும்.

இப்படி யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்குரிய பிரவேச அனுமதிப்பத்திரங்களை இன்றும் நாளையும் (வியாழன், வெள்ளி) யாழ் கல்வித்திணைக்களத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

## குட்டித் தமிழீழமாக மலையகம் மாறுமாம்

### முன்னாள் வெலிமடை எம்.பி.கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 16

மலையகம் குட்டித் தமிழீழமாக மாறப்போகின்றது.

—இப்படி எச்சரித்தார் வெலிமடையின் முன்னாள் எம்.பியான திரு. கே. எம். பி. ராஜரத்ன.

ஹாலி-எல பிரதேச சபைக்குப் போட்டியிடும் சுயேச்சைக் குழுவை ஆதரித்து நடந்த கூட்டம் ஒன்றில் திரு. ராஜரத்ன பேசினார்.

ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த நிலை மலையகத்திலும் சிங்களவருக்கு ஏற்படப்போகின்றது.

மலையகமும் தமிழர் கைக்கு போகப்போகின்றது.

பிரிவினை கேட்ட அமிர்தலிங்கம் தமிழ் நாட்டுக்கு ஓடிவிட்டார். பிரிவினை கோராமலே மலையகத்தை உருவாக்கும் முயற்சியில் தொண்டமான் ஈடுபட்டுள்ளார்.

ராஜீவ் காந்தி முறைத்தால் கொழும்பு அரசு நடுங்குகின்றது.

வாசுதேவ, குமாரணதுங்க, டியு குணசேகரா எல்லாரும் விடுதலைப்புலிகளுக்கு பரிந்து பேசுகின்றனர். தமிழருக்கு வரையறுக்கப்பட்ட தன்னாட்சி கொடுப்பேன் என்று சிறிமாவும் கூறிவிட்டார்.

இன்று அரசு, தொண்டமானின் கைவிரல் அசைவில்தான் நடக்கின்றது. எனவே மலையகச் சிங்களவர் விழிப்பாக இருந்து செயல்படவேண்டும்.

—இப்படி திரு. ராஜரத்ன சொன்னார். (உ-எ)

### சாமர்த்தி---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சிலர் 113 பாதுகாப்பு பெட்டிகளை திறந்து பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

எலக்ரோனிக் முறையிலான நவீன பாதுகாப்பு வசதிகளைக் கொண்ட இந்த களஞ்சியத்தின் [illegible] கதவு [illegible] தொன் நிறையும் 2 அடி மொத்தமும் உடையது. (உ)

### அகதிகள் நிலை குறித்து ஆராய்வு

சாவகச்சேரி, ஜூலை 16

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வடமராட்சிஅகதிகள் தொடர்பான மாநாடு ஒன்று யாழ் செயலக தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபர் திரு. கி. கோபாலரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம் பிள்ளை, கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க. வேலாயுதபிள்ளை, உணவுக்கட்டுப்பாட்டு திணைக்களத்தைச் சேர்ந்த திரு. எஸ். இராசரட்ணம் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இம்மாதம் 4 ஆம் திகதியின் பின் தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உடனடியாக இருவாரங்களுக்குத் தேவையான இந்திய நிவாரணஉதவிப் பொருள்களை வழங்குவதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ-31)

### பொலீஸாருக்கு அதிக அலவன்ஸ்

கொழும்பு, ஜூலை 16

அம்பாறை மாவட்டத்தில் பணிபுரியும் பொலீஸாருக்கு வழங்கப்படும் அலவன்ஸ் பணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விசேட பணி அலவன்ஸாக அறுநூறுரூபாவும், உணவு அலவன்ஸாக ஐநூறு ரூபாவும் மாதம் வழங்கப்படும். (உ-எ)

### தபாலில் அனுமதிப் பத்திரங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடமராட்சி தவிர்ந்த ஏனைய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பிரவேச அனுமதிப் பத்திரங்கள் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்திருக்கின்றது. (உ-எ)

### லெபனானில் குண்டுவெடிப்பு

பேரூட், ஜூலை 16

தெற்கு லெபனான் நகரான திரிப்பொலியில் நேற்று (புதன்) கார்க் குண்டு ஒன்று வெடித்ததில் 12 பேர் உயிரிழந்தனர்.

30 பேர் வரையில் காயமடைந்தனர். (உ-எ)

### உடுப்புகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை16

வடமராட்சி வலிகாமம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்டுஅகதிகளாகமுகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு உடுப்புகள் விநியோகம் செய்ய யாழ். பல்கலைக்கழக அகதிகள் புனர்வாழ்வு அமையம் முன்வந்துள்ளது.

எனவே அந்தந்தப் பகுதி முகாம் பொறுப்பாளர்கள் உடனடியாக யாழ் பல்கலைக் கழக அகதிகள் புனர்வாழ்வு கழகத்துடன் வெள்ளிக் கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. (உ-10)

கட்டடத் தொழிலாளர் பிரச்சனை:

## செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியிடம் மகஜர்

வட்டுக்கோட்டை, ஜூலை 16

சித்தன்கேணி கலைநகர் நேருஜீ கட்டடத் தொழிலாளர் சங்கத்தினர் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி திரு. இ. விஜயரத்தினத்திடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

மேற்படி கட்டடத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. கே. வி. கனகசிங்கம், செயலாளர் திரு. சு. பாலசிங்கம், சமாதான நீதிவான் சிற்பாசிரியர் திரு. வே. கந்தசாமி, ஆசிரியர் திரு. ச. செகராஜசிங்கம், வட்டுக்கோட்டைகிழக்கு கிராமோதயசபைத் தலைவர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் ஆகியோரை கொண்ட இக்குழு திரு. இ. விஜயரத்தினத்தை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து மகஜரை கையளித்தது.

மகஜரில், சுமார் 405 கட்டடத் தொழிலாளர் குடும்பங்கள் காகேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை இயங்காமையால் தொழில் வாய்ப்பின்றி பெருங்கஷ்டப் படுகின்றன என்றும் அவர்களுக்கு இந்தியஉணவுப்பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிசங்காளை உதவி அரசாங்க அதிபருக்கும் கையளிக்கப்பட்டுள்ளது. (இ-161)

### சட்டசபையில் உறுப்பினர்கள் மறியல்!

புதுடில்லி, ஜூலை 16

பீஹார் மாநில சட்டசபையில் மறியற்போர் நடத்திய 69 எதிர்க்கட்சி எம். எல். ஏக்கள் ஐந்து தினங்களுக்கு சட்டசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதவாறு இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

சட்டசபை மண்டபத்தில் இரண்டாவது தடவையாக நேற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் மறியல் நடத்தினர்.

சபாநாயகர் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் எதிர்க்கட்சி எம். எல். ஏக்கள் மறியலை கைவிட மறுத்தனர்.

இதைத் தொடர்ந்து சபாநாயகர் 69 எம்.எல். ஏக்களை இடைநிறுத்தஞ் செய்யும் உத்தரவை வெளியிட்டார்.

2 பெண்கள் உட்பட 69 எம். எல் ஏக்களையும் பாதுகாப்பு அதிகாரிகள் பலாத்காரமாக சபையில் இருந்து வெளியேற்றினர். (உ-எ)

### நிவாரணம் விநியோகம்

அச்சுவேலி, ஜூலை 16

வடமராட்சிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு இந்திய அரசினால் வழங்கப்படும் நிவாரண உணவுப்பொருள்கள் புத்தூர் ஆவரங்கால் பகுதியில் வைத்து விநியோகிக்கப் பட்டன.

இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் புத்தூர், ஆவரங்கால், சிறுப்பிட்டிப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளிலும், தனியார் வீடுகளிலும் தங்கியுள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கு புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி, ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம், சிறுப்பிட்டி இந்துதமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் வைத்து இந்திய அரசின் நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. (உ-11

### நீத்தார் பட்டியல்

**கந்தப்பு வைத்திலிங்கம்**

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் முன்னாள் கொழும்பு துறைமுக கூட்டுத்தாபன உத்தியோகத்தருமாகிய கந்தப்பு வைத்திலிங்கம்14-07-87ல் காலமானார் அன்னாரின் ஈமைக்கிரியைகள் 15-07-87 புதன்கிழமை நடைபெற்றன.

தகவல்:

மகள் அருட்செல்வி

(1287)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org